**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.271/2025**

**நாள் : 02.06.2026**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செல்வம் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.அண்ணாமலை | வயது | : | 47 |
| ஊர் | : | சந்திரபுரம் | தொழில் | : | கூலி |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

**குறுக்கு விசாரணை**

நான் இந்த மனுவில் முதல் மனுதாரர் ஆவேன். பெருமாள் என்பவர் என்னுடைய தம்பி ஆவார். 3,4 ஆம் மனுதாரர்கள் என்னுடைய சகோதரிகள். இறந்த கார்த்தி என்னுடைய இளைய சகோதரர். 3,4 ஆம் மனுதாரர்கள் கார்த்தி இறப்பதற்கு முன்பே திருமணமாகி அவர்களது கணவர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். இறந்த கார்த்திக்கு திருமணமாக வில்லை என்றால் சரிதான். எங்கள் பெற்றோருடன் வாழ்ந்து வந்தார். அவர்களது இறப்பிற்கு பின்பு அண்ணன்களுடன் வசித்து வந்தார். 14.06.2023 அன்று பண்டிகைக்கு சென்று திரும்ப வரும் போது தபால்மேடு என்ற இடத்தில் விபத்து ஏற்பட்டது. TN 83 Z 7898 என்ற ஷேர் ஆட்டோவில் என் தம்பியுடன் 8 நபர்கள் பயணம் செய்ததில் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த ஆட்டோவின் மேல் மேளம் அடிபதற்காக டிரம்ஸ் செட் கட்டி சென்றார்கள் என்றால் சரிதான். எதிரே அரசு பேருந்து கிருஷ்ணகிரியில் இருந்து திருப்பத்தூர் நோக்கி வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். ஆட்டோ ஓட்டுநர் குடிபோதையில் வேகமாக சென்று பேருந்து மீது மோதியதால் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை. பேருந்து ஓட்டுநர் தான் ஆட்டோ மீது மோதினார். விபத்து எப்படி நடந்தது என்று

எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. ஆட்டோ ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதால் ஆட்டோ ஓட்டுநரையும் அதன் உரிமையாளரையும் மனுவில் தரப்பினராக சேர்த்து இருக்க வேண்டும் அவ்வாறு சேர்க்காததால் மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. என் தம்பி உயிருடன் இருந்த போது மாதம் ரூ,20,000/– சம்பாதித்தாக கூறியிருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 3 , 4 மனுதாரர்களுக்கு என் தம்பி இறந்ததால் வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.